புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

===========================================================================

# ரா.ப.அரூஸ் படைப்புகளில் கல்விச் சிந்தனை

அ. அழகுராஜா,
முனைவர் பட்ட ஆய்வளர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

முனைவர் உ.கருப்பத்தேவன்,
நெறியாளர், உதவிப்பேராசியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

===========================================================================

## முன்னுரை

உலகம் உய்ய வேண்டும் என்னும் பொது நோக்கம் சமுதாயத்தில் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. இந்த சிந்தனை சிறக்க வேண்டும் என்பதனை ஆராய நேர்ந்தால் அதற்கான வழிகாட்டுதலாக கல்வி ஒன்றே அமையும். அதன் முன்னேற்றத்தில் பங்கு கொண்டு தாமும் அவ்வழியில் நின்று நிலைத்தவார்களில் இளம் படைப்பாளரும், தமிழ் ஆர்வளருமான ரா.ப.அரூஸ் அவார்கள் தன்னையும் நிலைநிறுத்திக் கொண்டு மக்களிடையே கல்வியின் மூலம் சிறந்த முற்போக்குச் சிந்தனையைக் கொண்டு சென்று வாழ்க்கையில் கல்வியின் முக்கியத்துவத்தை மாணவார்களிடம் எடுத்துரைக்க முனைகின்றார்.

கல்வியில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். உலகிற்கு முன்னோர்கள் சொல்லியதையே சொல்லிக் கொண்டிருக்காமல் வரும் சந்ததியினருக்கு வாழ்க்கை பற்றியும், சமுதாயம் பற்றியும் நாமும் சொல்லிச் செல்ல வேண்டும் என்ற சிந்தனையோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். இன்றைய காலச்சூழலில் மாணவார்களிடையே பாடபுத்தகத்தை மட்டுமே கொண்டு செல்லாமல் வாழ்க்கைக்குதவும் நூல்களையும் கொண்டு செல்வதே கல்வியில் வளார்ச்சியினை ஏற்படுத்த முடியும் என்ற சீரிய நோக்கத்தோடு கல்வி வளார்ச்சியில் அயராது உழைத்துக கொண்டிருக்கின்ற இலங்கையின் இளம் எழுத்தாளர் ரா.ப.அரூஸ் அவர்களின் படைப்புகளில் கல்வி பற்றிய செய்திகளை ஆராய்வனவாக இக்கட்டுரை அமைகின்றது.

## மாணவர்களுக்கான கல்வி

இச்சமுதாயத்தில் மாணவர்கள் வெற்றிபெற மனதில் தைரியமும், ஆழ்ந்த அறிவுச் சிந்தனையும் பெற்றிட கல்வி தேவை என்பதனை

"விரிந்த மனத்தை உருவாக்குவதும், விடுதலையான அவசியத்தை உணர்த்துவதும் ஆத்மாவின் பயிற்சியை வளர்க்கக்கூடியது கல்வி"[1]

என்று இரவீந்திரநாத் தாகூர் எடுத்துரைப்பதினைப் போன்று

"குழந்தையின் உடல், உண்மை, ஆன்மா ஆகியவற்றின் சிறந்த பண்புகளை
வெளிக்கொண்டு வருவதே உண்மைக்கல்வி"[2]

காந்தியடிகள் குழந்தையின் உடல், உண்மை, ஆன்மா இவற்றின் சிறந்தப் பண்பினை வெளிப்படுத்துவதே உண்மையான கல்வி என்று காந்தியடிகள் கல்வியைப் பற்றியும், அவற்றைக் கற்பதன் அவசியத்தையும், பயனையும் கூறுவதைப்போல்,

"அறிவு கற்றலின் முதிர்வு, அனுபவம் வாழ்தலின் முதிர்வு
கற்று வாழ்தல் இரண்டிலும் உயர்வு!"[3]

வாழ்க்கை வாழ கல்வி மட்டும் துணைபுரியும் என்று கூற முடியாது. அதைப்போல் அனுபவம் மட்டும் பயன் தரும் என்றும் கூறிவிட முடியாது. கற்றலுடன் சேர்ந்த அனுபவமே

*வாழ்க்கையினை சிறப்புற வாழ வழி செய்கின்றன என்று ரா.ப. ஆருஸ் 'மாணவர் மனதிற்கு' என்ற நூலில் கூறுகிறார். கல்வியானது ஒருவருக்கு இப்பிறவிக்குரிய நன்மைகளை எல்லாம் கொடுத்து வாழ்க்கைக்கு உதவுகிறது. அவர்களின் அறியாமை எனும் நோயினை நீக்கும் மருந்து 'கல்வி' போல் வேறொன்று எந்த உலகத்திலும் இல்லை என்பதனை,*

*"எம்மை உலகத்தும் யாம்காணோம் கல்விபோல்*
*மம்மர் அறுக்கும் மருந்து"[4]*

*என நாலடியார் எடுத்தியம்புகிறது.*

*கல்வியானது ஒருவருக்கு அறம், பொருள், இன்பம், வீடுபேறு கொடுப்பதோடு மட்டுமல்லாமல் இம்மண்ணில் வாழும் வரை கல்வியே அவர்களுக்குச் சிறந்த துணையாய் விளங்குகிறது.*

*"அறம் பொருள் இன்பமும் வீடு பயக்கும்*
*புறங்கடைந ல்லிசையும் நாட்டும் - உறுங்கலலொன்று*
*உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை*
*சிற்றுயிர்க்கு உற்ற துணை"[5]*

*இத்தகைய சிறப்பு மிகுந்த கல்வியினை இன்றைய காலச் சூழலுக்கு ஏற்றவாறு கல்வியை உலகிற்கு மூன்றாகப் பகுத்துக் காட்டுகிறார். கல்வியானது வெறுமெனே தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கில் மட்டுமே அமைதல் கூடாது. அக்கல்வி இந்தச் சமுதாயத்தில் புரையோடிக்கிடக்கின்ற மனிதநேயமற்ற செயல்பாடுகளைக் களைந்து அனைவரும் மனிதநேயத்துடன் வாழ்வதற்கு அடிப்படையாக அமைதல் வேண்டும். ஆதலால்தான் கல்வியினை,"பரிச்சைக் கல்வி ,பொது (அறிவுக்)கல்வி, மனதிற்கான கல்வி"[6]*

*என்று பாகுபடுத்துகிறார் ஆசிரியர். பரீட்சைக் கல்வியின் போதையிலிருக்கும் எம்மலர்கள் மற்ற இரண்டையும் மறந்தே விடுகிறார்கள். பொது (அறிவு)க்கல்வி என்று திரிபவர்கள் பேசுவதைத்தவிர எதனையும் சாதிப்பதாகத் தெரியவில்லை. இவையிரண்டும் ஒரு புறமிருக்க மனதிற்கான கல்வியை மருந்திற்குக்கூட எம்மலரில் காணமுடியவில்லை. இன்றைய காலச்சூழலில் மாணவர்கள் கல்வி பயின்று வெளியில் செல்லும்போது சமூகத்தில் நடக்கும் நிகழ்வுகளை எல்லாம் கண்டு கொள்ளாமல்தான், தன் குடும்பம் என்றே வாழ்கிறார்கள். வறியவர்க்குக் கொடுப்பதற்குச் சேர்க்கும் செல்வமும், உலகப் பொருள்களின் நிலையாமையை உணர்ந்து நடக்கும் நெறியும், எவ்வுயிர்க்கும் துன்பம் அளிக்கின்ற செயல்களைச் செய்யாத தூய்மையும் ஆகிய இம்மூன்றும் அறம் உணர்ந்த சான்றோர்களின் இயல்பாக நல்லாதனார்,*

*"இல்லார்க் கொன்றியும் உடைமையும் இவ்வுலகில்*
*நில்லமை யுள்ளும் நெறிப்பாடும் - எவ்வுயிர்க்கும்*
*துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்*
*நன்றறியும் மாந்தர்க்குள்"[7]*

*என்னும் பாடல்மூலம் கூறுகிறார்.*

*நன்கு கற்றவர்கள் அதாவது நல்ல கருத்துக்களைக் கற்று, அதன்படி வாழ்வார்கள். பிறரை மதித்து மனம் கோணாமல் நடந்து கொள்வார்கள். தேர்விற்கு மட்டுமே கல்வியினைக் கற்றவர்கள் பிறரின் மனம் வாடும்படி நடந்து கொள்வார்கள். அதன் காரணமாகத்தான் படித்த பட்டதாரிகள் கூட மனிதநேயத்தோடு நடந்துகொள்ள தயங்குகின்றனர். ஆதலால் கல்வி என்பது மனித மனதைத் தூய்மைப்படுத்தும் கருவியாக இருக்க வேண்டும். தமிழ், தமிழர் என்றவுடன் நினைவுக்கு வருவது சிறந்த பண்பாடு. பண்பாட்டுக்கு உரியவர்கள், அறம் நிறைந்தவர்கள் என்று கூறுவர். இப்படிப்பட்ட தமிழலக்கியங்களை கற்கின்றவர்கள் வார்த்தைகளை மட்டும் மனப்பாடம் செய்துகொள்கிறார்கள். சொற்களில் உள்ள கருத்தினை மனப்பாடம் செய்து பின்பற்றத் தயங்குகிறார்கள்.*

*"பட்டதாரி ஒருவன்*
*கட்டிய தாரத்தின் தந்தையிடம் அதட்டிக் கேட்கிறான்*
*பெரிய வீடு தா*
*அன்றேல் உன்மகள் இந்தா!"[8]*

*வரதட்சணை என்பது இன்றைய சூழலில் நாம் வாழ்கின்ற சமூகத்தில் நிலவி வருகின்ற அவல நிலையாகும். கல்வி கற்ற ஒருவன் வரதட்சணை பெற்றாலெனின் கல்வியறிவில்லாத ஒருவனை நாம் எவ்வாறு சீர்திருத்த முடியும். வரதட்சணையால் தனது மறு தாயாக விளங்கும்*

மனைவியைத் தூக்கியெறிய எவ்வாறு மனம் வருகின்றது. நாம் கற்ற கல்வியின் பயன் இல்லாமல் போய்விட்டது. கல்வியினை தேர்வுக்காகக் கற்கின்ற நிலையில்தான் இந்த அவலங்கள் நிலைபெறுகின்றன. அதனால் மனிதநேயத்தோடு நடந்துகொள்ளும் அளவிற்கு கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு அதைப் பின்பற்ற வேண்டும் என்கிறார் படைப்பாசிரியர்.

கல்வி பயின்ற ஒருவன் பிறர் மனம் வாடும்படி நடந்து கொள்வானே. ஆனால் அவனிடம் அறிவு மழிந்து கிடக்கின்றது. வெறும் ஏட்டுக் கல்வியை மட்டும் கற்று சமூகத்தில் நடமாவடுவதைத் தடுக்க 'மாணவர் மனதிற்கு' எனும் நூலின் மூலம் ஆசிரியர் விளம்புகிறார். நல்லொழுக்கம், நன்மைக்கு வித்தாகி இருமையிலும் இன்பம் விளைவிக்கும், தீயொழுக்கம் எக்காலத்தும் துன்பமே தரும் என்பதனை,

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்"[9]

என்ற இக்குறள் கூறுவதனை, மாணவர்கள் நன்குணர்ந்து ஒழுக்கத்தோடு மட்டுமின்றி சமுதாயத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இச்சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்த உள்ளவர்கள் மாணவர்களே.

"மாணவர்கள்
உளி ஏந்திய சிற்பிகள்
உலகை எப்படி செதுக்குவதென்று கற்க வேண்டும்
மாணவர்கள்
தூரிகை தாங்கிய ஓவியக்காரர்கள்
எதிர்கால உலகத்திற்கு எவ்வாறு வர்ணம் தீட்டுவதென்று
கற்க வேண்டும்"[10]

என்று இயம்புகிறார். உலகில் மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய அறிஞர்களாக மாணவர்கள் எதற்கும் பயனின்றி கிடக்கும் கல்லினை தெய்வமாக உருவாக்கும் சிற்பியைப் போன்று இவ்வுலகினை நமக்கு ஏற்றவாறு எப்படி அமைக்க வேண்டும் என்ற சீரிய சிந்தனையோடு செயல்பட வேண்டும். இன்றைய நவீன உலகை உருவாக்கியவர்கள் அன்றைய மாணவர்கள். வரவிருக்கும் புதிய நவீன உலகினை உருவாக்குபவர்கள் இப்போதுள்ள மாணவர்கள். ஆதலால் மாணவர்கள் கல்வி முறையின் மூலமாக மட்டுமே நவின உலகினைப் படைக்க முடியும் என்பதனால் கல்வி முறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதை படைப்பாளரின் எண்ணமாக பிரதிபளிக்கிறது.

ஆசிரியர் ஆகாதார்

பாடம் கற்பிக்கும் குணமில்லாமை, இழிந்த குணமாகிய இயல்பு, மாணாக்கருக்கு வரும் கல்வியைக் குறித்துத் தான் கொள்ளும் பொறாமை, பொருளின் மேல் மிகுதியாகக் கொள்ளும் ஆசை, மெய்ப்பொருளைக் கூறாமல், பொய்ப்பொருளைக் கூறி வஞ்சித்தல், சந்தேகம் கேட்போருக்கு அச்சம் உண்டாகப் பேசுதல், முரண்பட்ட கருத்தை உடையவர், ஆசிரியர் ஆகமாட்டார் என்று பவனந்தி முனிவரின் நன்னூல்,

"மொழி குணம் இன்மையும், இழிகுண இயல்பும்
அழுக்காறு அவாவஞ்சம் அச்சம் ஆடலும்,
கழற்குடம் மடற்பனை பருத்திக்குண்டிகை,
முடத்தெங்கு ஒப்பென முரண்கொள் சிந்தையும்,
உடையோர் இலர் ஆசிரியர் ஆகுதலே"[11]

ஆசிரியர் ஆகாதவர் பற்றி விளக்குகின்றது. ஆனால் ஆசிரியர் என்னும் போர்வையில் சிலர் மாணவர்களிடம் எழும் சந்தேகங்களைத் தீர்க்க முடியாமல், அதனால் அம்மாணவர் மீது கோபம் கொண்டு பழிவாங்கும் எண்ணத்தோடும் செயல்படுகின்றார்கள். பாடங்களைக் கற்பித்துக் கொடுக்கும் ஆசான்களுக்கே சமூக நிகழ்வுகளைப் பற்றிய எண்ணம் இல்லையென்றால், மாணவர்களிடத்தில் எவ்வாறு இருக்கும். ஆசிரியர்கள் தேர்விற்கான செய்திகளை மட்டும் போதிக்காமல் எதிர்கால வாழ்விற்கு ஏற்ற வகையில், முன்னேற்றம் அடையும் நிலையில் கல்வியனைப் போதித்தால் மட்டுமே வெற்றி அடைய முடியும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாடப்புத்தகம் மட்டுமின்றி சமூகச் சிந்தனைகளைத் தாங்கிய நூல்களையும் கற்பிக்க வேண்டும்.

மிக உயரத்தில் ஏற முடியாது என்று அவனைத் தடுப்பதை விடுத்து உங்களால் மட்டுமே ஏற முடியும் என்ற எண்ணத்தை விதைக்கக் கற்றுக் கொடுப்பதில் இன்றைய ஆசிரியர்கள் தவறு இழைக்கின்றனர்.

"பள்ளிக்கூடத்தில்
தினம்
ஆறு மணித்தியலெங்களாய்
தசாப்தம் தாண்டிய
பாடப்
பயிர்ச் செய்கையில்
நாம்
அறுவடையாய்ப் பெறும்
சில
பட்டங்கள் கூட
வாழ்க்கை வயலில்
பதர்களாய்ப்
பறந்துவிடுகின்றன
……………………….."[12]

எனும் கவிதையின் மூலம் பரைசாட்டுகிறார் ஆசிரியர். பள்ளிப் படிப்பினால் பெறுகின்ற சில பட்டங்கள் வாழ்க்கைக்குப் பயன்படாமல் போய்விடுகின்றன என்பதனைச் சாடுகின்ற ஆசிரியர் வாழ்க்கைக்கு தேவையான கல்வியைக் கொடுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றார்.

கல்விக்கூடங்கள்

“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை”[13]

மனித வாழ்க்கையில் ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. மற்ற பொருட் செல்வங்கள் எல்லாம் காலப்போக்கில் அழியக் கூடியவை என்கிறார் வள்ளுவர்.

“வாய் நன்கு அமையாக்குளனும் வயிறாறத்
தாய்முலை உண்ணாக் குழவியும் சேய்மரபில்
கல்வி மாண்(பு) இல்லாத மாந்தரும் இம்மூவர்
நல்குரவு சேரப்பட்டார்”[14]

நீர்வரும் வழி நன்றாக அமையப் பெறாத குளமும், தன் வயிறு நிரம்புமாறு தன் தாயிடம் பால் உண்ணாத மழலையும், உயர்ந்த முறையில் கல்வி கற்காத மாந்தரும் ஆகிய மூவரும் வறுமையால் அல்லல்படுவர். அதாவது உயர்ந்த முறையில் கல்வி என்பது மனிதனைப் பயன்படுத்துகின்ற கல்வியாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கல்வியினைக் கற்காத மனிதர்கள் வறுமையில் அல்லல்பட்டு, துன்பப்படுவர்.

இன்றைய நவீன கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் பன்மடங்கு உயர்ந்துள்ளபோதும், அவை கட்டிடங்கள், மைதானங்கள், வகுப்பறைகள், சுவர்கள் போன்றவற்றில் மட்டுமே வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் காணப்படுகின்றது. மாணவர்களின் சிந்தனைகளில் அவை பிரதிபலிக்கவில்லை என்கிறார் ஆசிரியர். வளர்ந்த நாடுகளோடு போட்டி போடுகின்ற அளவிற்கு நம் கல்வி நிலை இல்லாதிருப்பதிருக்கின்ற அவல நிலையைக் கீழ்வருமாறு சித்தரித்துக் காட்டுகின்றார்.

“முன்னர் இருந்ததை விட தற்போதைய பாடசாலைகளில் நிறையவே மாற்றங்களைக் காணமுடிகிறது.“கட்டிடங்கள் மைதானங்கள், வகுப்பறைகள், மதில்கள் என்பனவற்றில் வளர்ச்சியைக் காணமுடிகிறது. ஆனால், மாணாக்கரின் மனங்கள்தான்; இன்னும் மங்கலாகவே கிடக்கின்றன”[15].

ஒவ்வொரு பெற்றோரும், தன் பிள்ளைகள் நன்றாக படித்து உயர்ந்த நிலையினை அடைய வேண்டும் என்பதே மிகப்பெரிய கனவாக இருக்கும். அக்கவனவினை நினைவாக்கவே பிள்ளைகளே பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள். ஆனால், இன்று ஆசிரியர் என்னும் வேசத்தில் இருக்கக்கூடியவர்கள் மாணவர்கள் பற்றி பெற்றோர்களிடம் குறைகூறவே இன்றைய சமூக பாடசாலைகள் பழகிக்கொண்டது.

"மாணாக்கரின் ஒழுக்கம் கவலைக்கிடமாகக் கிடக்கமுழுக் காரணமும் பெற்றோர்கள் தான் என அங்கலாய்த்து ஆசான்கள் பெற்றோர்களை அழைத்து பாடசாலையில் கூட்டம் நடத்துவதைக் காணமுடிகிறது"[16]

மாணவர்மனதிற்கு எனும் படைப்பின்மூலம் சாடுகின்றார்.

வியாபாரக் கல்வி

உலகில் நுகர்பொருளாகக் கருதப்படுவது கொடுத்து வாங்கக்கூடிய பொருள்களே. ஆனால் இன்றைய காலச்சூழலில் கல்வியும் நுகர்பொருளாக மாறிவிட்டது. ஒவ்வொரு பாடசாலையும் தங்களின் சுவர் உயரத்திற்கு ஏற்றவாறு கல்வியை விற்க முனைகின்றது. இந்தியாவில் உயர்தரமான செல்வந்த பாடசாலைகள் தமது பாட ஏற்பாடு கல்விச் செயற்பாடு பற்றி பத்திரிக்கையில் விளம்பரம் செய்வதில் போட்டியிடுகின்றன. தாம் வழங்கும் கல்வியை சந்தைப்படுத்த முனைகின்றனர். கல்வி என்பது விற்பனையாகப் பார்க்கப்படுகின்றது என்பதனை விளக்குகின்றது எனலாம். உலகில் விலை மதிப்பில்லா செல்வம் கல்வியே ஆகும். இன்றைய கால சமூகத்தில் கல்வியை நிர்ணயிக்கக் கூடியவை பணம்தான் என்பதனை ஆசிரியர், 'கல்வியில் கூட பணம் தற்போது பெரியதொரு செல்வாக்கினைச் செலுத்தி வருகின்றமையால் தமது பிள்ளைகளின் நலன் கருதி ஒவ்வொரு தந்தையும் அதிகம் உழைக்க வேண்டிய தேவை இருக்கிறது'. மேலும், ஓர் மாணவனுக்குக் கல்வியைக் கற்பிக்க வேண்டிய ஆசிரியர்கள் அவனது மனநிலையைப் புரிந்துகொள்வதைவிட, தங்களின் பள்ளிக்கூட நிர்வாகம் செழிப்புற இருக்க பலவிதமான முறையில் கட்டணங்கள் வசூலிப்பதை ஆசிரியர்,

"பாடசாலையில் வசதிக் கட்டணங்கள்
பரீட்சைக் கட்டணங்கள்
வகுப்பாசிரியரின் மேசைச் சேலை வாங்கக் காசு
மேசைக்குப் பெயின்ட் அடிக்கக் காசி
குழுச் செயற்திட்டத்திற்கான காசி
இணைப்பாட விதானப் பிரயாணங்களுக்கான காசி"[17]

என்று எடுத்தியம்புகிறார்.

பள்ளிக்கூடங்களில் பாடங்களை நடத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், பள்ளிக்கூட நிர்வாகத்திற்கு ஏற்றவாறு கட்டணங்கள் வசூலிப்பதிலே கவனம் செலுத்துகிறார்கள். தற்பொதுள்ள சூழல்களில் பெரும்பான்மையான பள்ளிகளின் நிலை இவ்வாறுதான் உள்ளது. இவை தொடர்ந்தால் கல்வி, பணம் இருப்பவர் மட்டுமே கற்க முடியும் என்று சட்டமும் வகுத்துவிடுவார்கள் எனலாம். இவற்றினை 'மாணவர் மனதிற்கு' எனும் படைப்பின்மூலம் வெளிக்கொணர்கின்றார்.

ஒழுக்கமற்ற ஆசிரியர்

ஒழுக்கம் என்பது ஒரு மனிதனுக்கு மிக அவசியமான ஒன்றாகும். ஒழுக்கத்தின்சிறப்புக் குறித்து திருவள்ளுவர்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"[18]

என்று ஒழுக்கம்தான் ஒரு மனிதனை சமுதாயத்தில் உயர்ந்தவனாகக் காட்டுகிறது. மாதா, பிதா, குரு தெய்வம் என்று தெய்வத்திற்கு முன்பாக ஆசிரியர்களை வைத்துப் போற்றுவார்கள். அவ்வாறிருக்க ஆசிரியர்கள் மாணவர்களின் அறிவு வெளிச்சத்திற்கு உதவாமல், அவர்களைத் தீய வழிகளில் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை ஆசிரியர்,

எங்களது

'அறிவு விருட்சத்திற்க
நீருற்ற வேண்டியவர்களில்
சிலர் இங்கே
தீ மூட்டிக் கொண்டிருக்கிறார்கள்"[19]

என்று 'ஆசிரியர்களிடமிருந்து தப்பித்தல்' எனும் கட்டுரையின் வாயிலாகப் புலப்படுத்துகின்ற பாங்கு போற்றுதலுக்குரியது. மேலும். மாணவப் பருவத்தின் அறிவுப் பசியைத் தீர்க்க வேண்டிய ஆசான்களே அவர்களின் காமப்பசியைத் தீர்க்க மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

*கால மாற்றத்திற்கு ஏற்ப ஆசான்களின் எண்ணமும் மாறிவிட்டது. பாராட்டி அனுப்ப வேண்டிய ஆசிரியர்களே, படுக்கைக்கு அழைக்கும் காலம் இன்று நடந்தேறுகின்றது. அதனை,*

*"பள்ளிக் கூடச்*
*சிம்மாசனத்தில் வைத்து*
*மாணாக்களுக்க*
*மணிமுடி சூட்டி*
*அனுப்பிய காலம்*
*மலையேறிப் போய்விட்டது*
*தற்போதோ – அது*
*தலைகீழாய்ப் போய்விட்டது!'*
*'முன்மாதிரிக்கான*
*மூத்த உயிர்களில்*
*ஒழுக்கத்தின் முதுகெழும்பு*
*உடைந்து போய்விட்டது"*[20]

*என்று 'ஆசிரியர்களிடமிருந்து தப்பித்தல்' எனும் கட்டுரையின் மூலம் விளக்குகிறார் ஆசிரியர்.*

*ஆசிரியருக்கான ஒழுக்கம்*

*ஆசிரியர் குடிபிறந்தவர்களின் குணங்களை உடையவராக இருத்தல் வேண்டும். கருணை உள்ளவராக இருத்தல் வேண்டும். மேன்மை பொருந்தியவராக இருத்தல் வேண்டும். பல கலைகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். மாணவர்களுக்கு எடுத்துச் செல்லும் சொல்வன்மை உடையவராக இருத்தல் வேண்டும். அவர் பூமியைப் போலவும், மலையைப் போலவும் நற்குணம் உள்ளவராக இருக்க வேண்டும். உலகியல் அறிவும் உள்ளவராய் இருக்க வேண்டும் என்று நல்லாசிரியர்க்கான இலக்கணம் கூறுகிறார் நன்னூலார். பூமி போலப் பொறுமையும், மலைபோல எங்கும் தெரியக்கூடிய மாண்பும், தராசு போல நடுநிலைமையும், மலர் போல மென்மையும் உடையவராக இருக்க வேண்டும் என்பதனை,*

*"குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை*
*கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை*
*நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்*
*உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்*
*அமைபவன் நூலுரை யாசிரி யன்னே"*[21]

*என்று நன்னூலார் கூறுவது போன்றே படைப்பாளரின் நல்ல ஆசிரியருக்கான விளக்கம் தருகின்றார். உள்ளத்தூய்மையும், எதர்பார்க்காத மனசும் மாணவனின் அறிவைக் கண்டு பாராட்டுதலும், மாணவனின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும் பண்பையும் பெற்றவராக ஆசிரியர் திகழவேண்டும் என்பதை,*

*"தூயஉள்ளம் எதுவும் எதிர்பாராத சேவை எண்ணம்*
*தன் மாணவனின் வளர்ச்சி கண்டு கண்ணீருக்கு ஆனந்தத்தை*
*அடைமொழியாக்கும் உயர்ந்த மனசு*
*அறிவில் சிகரம் தொட மாணாக்கருக்கு ஏணியாகி*
*அறியாமைக் கடலைக் கடக்க அவர்களுக்குத் தோணியாகி*
*நல்லதை ஊட்டு, கெட்டதை இதுவெனக் காட்டி*
*மாணாக்கரை மனிதராக்கும் புனிதர்களின் புகழ்பாட*
*மாணவர்கள் மறந்து விடலாகாது"*[22]

*என்று ஆசிரியர்களின் மீதுள்ள எஞ்சிய மதிப்பினைக் காப்பாற்றுபவர்களைப் பற்றி 'நல்ல ஆசான்களை மதித்தல்' எனும் படைப்பின்மூலம் எடுத்தியம்புகிறார் ஆசிரியர். மாணவன் என்பவன் ஆசிரியருக்கு கீழ்பணிந்து நடக்க வேண்டும். அவ்வாறு கீழ்பணிந்து நடப்பவனே நல்ல ஒழுக்கமுடையவனாகவும், கல்வியறிவில் சிறந்தவனாகவும் சிறந்து விளங்குகின்றான் என்பதை,*

*"ஐங்குரவர் ஆணை மறுத்தலும் ஆர்வுள்ள*
*எஞ்சாத நட்பினுள் பொய் வழக்கும் நெஞ்சமர்ந்த*
*கற்புடையாளைத் துறத்தலும் இம்மூன்றும்*

*நற்புடை யிலாளர் தொழில்'*[23]

*ஐங்குரவர் என்பவர்கள் அரசன், ஆசிரியன், தாய், தந்தை, தமையன் என்று இப்பாடல் வரிகள் விளக்குகின்றது. மேலும் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நிலையில் வைத்துப் பார்க்கும்போது தாய் தந்தையர்க்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுகிறார். அதன் பிறகே தெய்வம். எனவே மாணவர்கள் ஆசிரியரின் சொல்லுக்கு கீழ்பணிந்தும், மதித்தும் நடக்க வேண்டும் என்ற இப்பாடலின் கருத்தினைப் போன்றே, பெற்றோர்களால், நண்பர்களால், உறவினர்களால் செய்ய முடியாத எத்தனையோ காரியங்களைச் செய்து மாணவனின் வளர்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய ஆசான்களை மதிக்க வேண்டும். ஈன்றெடுத்த தாயினால், தந்தையினால், நண்பர்களால், உறவினர்களால் செய்ய முடியாத எத்தனையோ காரியங்களை ஆசான்களால் மாணாக்கர் மத்தியில் பிரதிபலிக்கச் செய்து விடலாம். அவ்வாறானதொரு பிரம்மாண்டமான சக்தி ஆசிரியத்துவத்திற்கு இருக்கிறது என்று விளக்கியுள்ளார்.*

*நூலைப் பயிலும் முறை*

*நூலைப் பயிலும் இயல்பினைக் கூறுகின்றபோது, உலக வழக்கு செய்யுள் வழக்கு என இருவகை வழக்குகளையும் அறிதல், மூல பாடங்களை மறவாமல் பாதுகாத்தல், தான் கேட்டவற்றைப் பலமுறை சிந்தித்தல் ஆசிரியனை அடுத்துத் தான் கேட்ட கருத்துக்களைத் தன் மனத்தில் பதியுமாறு மீண்டும் கேட்டல். இவ்வாறு கற்கும் மாணவர்களோடு பழகுதல், அவர்களிடம்தான் ஐயப்பட்ட பொருளை வினாவுதல், அவர்கள் ஐயப்பட்டு வினாவியதற்கு விடை கூறுதல் என்று கூறப்பட்ட இம்முறைகளைக் கடமையாகக் கொண்டால் அறியாமை நீங்கும்.*

*''நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்*
*பாடம் போற்றல் கேட்டல் நினைத்தல்*
*ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்*
*அம்மாண்பு உடையோர் தம்மொடு பயிறல்*
*வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை*
*கடனாகக் கொளினே மடம்நனி இகக்கும்'*[24]

*எனும் நூற்பா வரிகள் நூலைப் பற்றியும், நூல்பயிலும் முறையினைப் பற்றியும் கூறி சிறப்புச் செய்கின்றது. இருண்டு கிடக்கக்கூடிய மதிநுட்பத்தினை மாணவனிடமிருந்து வெளிக் கொண்டு வருவதற்கு பாடப்புத்தகம் மட்டுமின்றி பல சரித்திர நாயகர்களின் சரித்திரத்தையும் கற்க வேண்டும். அவ்வாறு கற்பதன் மூலம் அறிவு வளர்ச்சியும், உலக நடைமுறைகளையும் கண்டு கொண்டு உலகில் வாழ முடியும் என்பதையும் சிறந்த நூல்கள் எது என்பதையும் கீழ்க்காணுமாறு பட்டியலிடுகின்றார்.*

*"வழிகாட்டும் சரித்திரங்கள்*
*புனிதமானோர் சரிதங்கள்*
*இதயம் கழுவும் இலக்கியங்கள்*
*சிந்தனையின் பரப்பைக் கூட்டும் தத்துவங்கள்*
*நாவிற்கு வலிமையூட்டும் ஆன்றோர்வாக்கு*
*நிகழ்காலம் அரங்கேற்றும் உலகின்போக்கு*
*நியாயம் நிலைநாட்டும் நீதிநூல்கள்*
*நிஜமான கதைகள் சொல்லும் ஆதிநூல்கள்"*[25]

*என்று 'வாசிப்பினால் பூரணமடைதல்' எனும் தனது படைப்பில் கூறுகிறார். உலகினை வெளிச்சம் போட்டுக் காட்டக்கூடிய புனிதமான நூல்களைக் கற்பதன் மூலம் அறிவுக்கடலில் நீந்தி வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையினை ஊட்டுகின்றார். மேலும், காதலன் காதலியின் மீது காதல் கொண்டது போல், அறிவுப் பசியில் இருக்கும் மாணவன் தன் அறிவுப் பசியைத் தீர்க்க பல நல்ல நூல்களை காதல் செய்ய வேண்டும். அவ்வாறு காதல் கொண்ட மாணவனின் கவிதையாக,*

*"நான்*
*இந்த உலகில்*
*உன்னைத் தவிர*
*வேறு எவரையும்*
*நேசிப்பதே கிடையாது*
*நான்*

உன்னைத்
தொடும் போதெல்லாம்
உன்னுள்ளேயே
புதைந்து விடுகிறேன்!"[26]

'விடுகதை' எனும் கவிதையின் வாயிலாக, புத்தகங்களின் மீது காதல் கொள்ள வேண்டும், மனிதர்களைக் காதலித்து ஏமாந்து வாழ்க்கையில் சீரழிவதைவிட நூல்களின் மீது காதல் கொண்டு சமூக வளர்ச்சியில் பங்காற்ற வேண்டும் என்பதனைச் சுட்டுகிறார்.

காதல்

காதல் என்பது அனைவரிடத்தும் இருக்கக்கூடிய ஓர் உணர்வாகவே திகழ்கின்றது. அத்தகைய காதலினை,

"காதற் காதற் காதற்
காதற் போயின்
சாதற் சாதற் சாதற்"[27]

என்னும் பாடல் வரியானது காதலினைப் பற்றிக் கூறுவது போலவே காதல் மனிதனிடம் அவசியம் தான். ஆனால் அது அவனது ஆளுமைத்திறனை வெளிப்படுத்தும் செயற்பாட்டில் காதல் கொள்ள வேண்டும் என

"ஓவியனுக்கு ஓவியம்
கவிஞனுக்குக் கவிதை
வைத்தியனுக்கு மருத்துவம்
அரசனுக்கு ஆட்சி
விஞ்ஞானிக்கு கண்டுபிடிப்பு
வியாபாரிக்கு வியாபாரம்
ஆனால்
அகிலத்தார் அனைவருக்கும் காதல்!"[28]

என்று 'காதலில் விழல்' எனும் கட்டுரையின் மூலம் ஆசிரியர் கூறுகிறார். அவற்றின் மீது காதல் கொண்டால் வாழ்க்கை இன்புற்று அமையும். அதனை விடுத்து மாணவப் பருவத்தில் காதல் கொள்ளும் மாணவர்கள் இளம் வயதிலேயே பல தவறான செயல்களுக்கு ஆளாகி இளம் வயதிலேயே வாழ்வா? சாவா? என்ற வினாவிற்கு வந்துவிடுகிறார்கள் என்பதனை, வளரும் பருவத்தில் வயிற்றுக்குள் குழந்தை வளர்த்தல் எனும் நிலைதோன்றி விடுதல். உண்மையிலேயே யாவரும் கண்ணீருடன் சிந்திக்க வேண்டியதோர் விடயமாகும். மாணவப் பருவம் உண்மையிலேயே இத்தகைய பாரிய ஒழுக்கப் பிறழ்வினைச் சந்திக்கலாகாது. இத்தகைய செயலினை விடுத்து கல்வியின் மீது காதல் கொண்டு சமுதாயத்தில் நல்ல நிலையை அடைய வேண்டும் என்று ஆசிரியர் கூறுகிறார்.

துறையைத் தேர்தல்

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு துறையின் மீது ஆர்வமும், திறமையும் இருக்கும். அத்துறையில் சென்றால் மட்டுமே வாழ்வில் உயரமுடியும். அது மட்டுமின்றி அனுபவமும் ஆர்வமும் இல்லாத ஓர் துறையில் கால் பதிக்கும்போது தோல்வியே நேரிடும். அத்தகைய சூழலில் மனதிற்கு பிடித்தமான துறையில் ஈடுபடுவதை விடுத்து, அடுத்தவரின் அறிவுரை படியும், நெருக்குதல்களையும் கண்டு துறையினை தேர்வு செய்தலில் மாற்றம் கொள்ளாது இருத்தல் வேண்டும் என்பதனை உணர்த்தும் விதமாக,

"பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்
பாயும் மீன்களில் படகினைக் கண்டான்
எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான்"[29]

அவரவர் திறமைக்கு ஏற்ப துறைகளில் நாட்டம் கொண்டதனால் பறவைகயைக் கண்டு விமானமும், மீனைக்கண்டு படகும், எதிரொலி கேட்டு வானொலியும் மனிதன் கண்டுபிடித்தான் என்பதனை கண்ணதாசன் பாடல் வரிகள் உணர்த்துவது பெற்றோர்கள் பிள்ளைகளின் திறன்களை கண்டறியாது அவர்களுக்குப் பிடித்தமான துறையில் சேர்ந்து விடுகின்றனர். இதனை ஆசிரியர்,

"நிறையப் பெற்றோர்கள் இன்று தம்பிள்ளைகளை

குருடனைப் பிடித்து விழித்துப் பார்"[30]

என்ற கணக்கில் பிள்ளைகளுக்கு இயலாத விருப்பமில்லாத விடயங்களைச் செய்யுமாறு கட்டாயப்படுத்துகிறார்கள் என்று பிள்ளைகளின் வாழ்க்கையினை பெற்றோர்களே திசை திருப்பி விடுகிறார்கள் என்பதனைப் பிடித்தமான துறையைத் தெரிவு செய்தல் எனும் கட்டுரையின் மூலம் வெளிச்சமிட்டுக் காட்டுகிறார். மேற்கூறியது போல் ஒவ்வொரு அறிஞனும் அவர்களுக்கான துறையினை தேர்வதில் ஐயம் கொள்ளவில்லை. ஆகையால் வெற்றியும் கண்டனர். துறையினைத் தேர்வதில் மாணவர்கள் பிறரைக் கண்டு பொறாமை கொள்ளாது, தனக்கு தெரிந்த ஆர்வமுள்ள துறையில் தன்னை புகுத்திக் கொள்ளுவதன் மூலம் வெற்றியினை அடையலாம் என்கிறார்.

இலட்சியம்

மனிதராய்ப் பிறந்த அனைவருக்கும் இலட்சியம் என்பது இருக்கும். அனைவரும் அந்த இலட்சியத்தினை நோக்கி பயணப்பட வேண்டும். ஒவ்வொரு மாணவனும் ஓர் சிறிய வட்டத்திற்குள்ளேயே தங்களது வாழ்க்கையினை முடித்துக் கொள்கிறார்கள். அதனை விரிவுபடுத்தும் நோக்கத்தோடு ஆசிரியர் செயல்பட வேண்டும். பள்ளி ஆசான் என்பவர் மருத்துவர், தொழில்நுட்ப வல்லுநர் போன்று பெரிய மதிப்புமிக்க இலக்குகளை வைத்துக்கொண்டு செயல்பட வேண்டும்.

"இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
இயந்திரங்கள் வகுத்திடுவீரே"[31]

என்ற பாரதியின் எண்ணத்திற்கிணங்க, படைப்பாசிரியரும் இலட்சியவாதிகளை புகழ்ந்துரைக்கும் வண்ணம் நல்லொழுக்கமும், சீரிய நற்பண்பும் கொண்ட மனிதர்கள் மருத்துவராக, தொழில்நுட்ப வல்லுநராக, சட்ட வல்லுநராக, அதிபராக, அரசு அலுவலராக, தொழிலதிபராக வேண்டும் என்பதனை,

"நல்ல மனிதனொருவன் வைத்தியனாக வேண்டும்
நல்ல மனிதனொருவன் என்ஜினியராக வேண்டும்
நல்ல மனிதனொருவன் சட்டத்தரணியாக வேண்டும்
நல்ல மனிதனொருவன் அதிகாரியாக வேண்டும்
நல்ல மனிதனொருவன் உயிர்ப்பிக்க வேண்டும்"[32]

என்று 'இலக்கை நோக்கிப் பயணித்தல்' எனும் கட்டுரையின்மூலம் கூறுகிறார் ஆசிரியர். தங்களது இலக்குகளை உயர வைத்துக் கொள்ளும்போதுதான் அவ்விலக்குகளை நோக்கி விரைவாகப் பயணித்து வெற்றி பெற முடியும்.

முடிவுரை

கல்வி என்பது வெறுமனமே ஏட்டுக் கல்வியாக மட்டுமே இருந்து விடாமல், கற்றதன் விளைவாக சமுதாயத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். கல்வியில் பல திருத்தங்களை அமைப்பதன் மூலம் சமுதாயத்தை உயர்நிலைக்குக் கொண்டு செல்லலாம் என்ற சீரிய கருத்தினையும் கல்வி அனைவரும் கற்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இரா.ப.அரூஸ் கல்வி வளர்ச்சியில் செயல்பட்டு வருவதனை இவ்வாய்வின் மூலம் காணலாயிற்று.

அடிக்குறிப்பு:

1. மீனாட்சி சுந்தரம். ஆ - இந்திய சமுதாயக் கல்வி, ப.எண் -25
2. மேலது - ப.எண் -26
3. அரூஸ். ரா.ப. - மாணவர் மனதிற்கு, ப.எண் -17
4. பத்மதேவன் (உ.ஆ) - நாலடியார், ப.எண் -94
5. சொக்கலிங்கம் (உ.ஆ) - நீதிநூற்கொத்து, ப.எண் - 06
6. அரூஸ். ரா.ப. - மாணவர் மனதிற்கு, ப.எண் -19
7. மாணிக்கவாசகன். ஞா (உ.ஆ) - திரிகடுகம் மூலமும் உரையும் ப.எண் - 21
8. அரூஸ். ரா.ப. - மாணவர் மனதிற்கு, ப.எண் -20
9. பாரிமேலழகர் (உ.ஆ) திருக்குறள் ப.எண. - 28
10. அரூஸ். ரா.ப. - மாணவர் மனதிற்கு, ப.எண் -20 -21
11. தமிழண்ணல் (உ.ஆ) - நன்னூல் , ப.எண். -35

12. அரூஸ். ரா.ப. - மாணவர் மனதிற்கு, ப.எண் -32
13. பாரிமேலழகர் (உ.ஆ) - திருக்குறள் , ப.எண். - 80
14. சுப்பிரமணியன். ப.வே (உ.ஆ) - பதினெண்கீழ்கணக்கு நூல்கள் தெளிவுரை- ப.எண -8
15. அரூஸ். ரா.ப. - மாணவர் மனதிற்கு- ப.எண் -36
16. மேலது - ப.எண் -32
17. மேலது - ப.எண் -40
18. பாரிமேலழகர் (உ.ஆ) திருக்குறள் -பா.எண். - 131.
19. அரூஸ். ரா.ப. - மாணவர் மனதிற்கு- ப.எண் -58
20. மேலது- ப.எண் -58
21. தமிழண்ணல் (உ.ஆ) நன்னூல் - ப.எண். -42
22. அரூஸ். ரா.ப. - மாணவர் மனதிற்கு- ப.எண் -60
23. தமிழண்ணல் (உ.ஆ) நன்னூல் - ப.எண். - 41
24. மேலது - நூற்பா - 41
25. அரூஸ். ரா.ப. - மாணவர் மனதிற்கு- ப.எண் -60
26. மேலது - ப.எண் -75
27. பாரதியார் கவிதைகள் ப.எண் - 143
28. அரூஸ். ரா.ப. - மாணவர் மனதிற்கு- ப.எண் -90
29. கண்ணதாசன் பாடல் -திரைப்படம் பாவமன்னிப்பு
30. அரூஸ். ரா.ப. - மாணவர் மனதிற்கு- ப.எண் -103
31. பாரதியார் கவிதைகள் ப.எண் - 103
32. அரூஸ். ரா.ப. - மாணவர் மனதிற்கு- ப.எண் -108


துணைநூற் பட்டியல்


1. அரூஸ். ரா.ப - மாணவர் மனதிற்கு, கே.ஐ.மீடியா குரூப் பப்ளிகேசன், மஹரூப் நகர், கிண்ணியா- 03. இலங்கை.
2. சுப்பிரமணியன்.ப.வே. (உ.ஆ) - பதினெண்கீழ்கணக்கு நூல்கள் (தெ.உ) மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.
3. சொக்கலிங்கம் (உ.ஆ) - நீதிநூற்கொத்து, வானதி பதிப்பகம், சென்னை, ஆண்டு-1995
4. தமிழண்ணல் (உ.ஆ) - நன்னூல் எழுத்ததிகாரம், கணபதி பிரஸ், சென்னை. ஆண்டு- 2012.
5. பத்மதேவன் (உ.ஆ) - நாலடியார், சாராபுக்ஸ் பி.லிட்., சென்னை. ஆண்டு - 2008.
6. பரிமேலழகர் (உ.ஆ) - திருக்குறள், பு+ம்புகார் பதிப்பகம், சென்னை- ஆண்டு -2004.
7. பாரதியார் கவிகைள் - பாரதியார், பூம்புகார் பதிப்பகம், சென்னை - ஆண்டு -2004.
8. மாணிக்கவாசகமன்.ஞா (உ.ஆ) - திரிகடுகம் மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை - 2009.
9. மீனாட்சிசுந்தரம். ஆ - இந்திய சமுதாயக் கல்வி, காவியா பப்ளிக்கேசன்ஸ், திண்டுக்கல்- 2008.


********* ********* ********** ********* ********* ********** ********** **********